**S.C NO. 19/2013**

**Date: 03.10.2024**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )**

**சாட்சியாகிய திரு. பெருமாள் என்ற Pw4 நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10 விதியின் Tr.A.Pachaiyappan, இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்**

**செய்யப்படுகிறது.**

**பெயர் – திரு. பெருமாள்**

**S/o, – திரு. எல்லபிள்ளை**

**வயது – 50**

**தொழில் – விவசாயம்**

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது பூஞ்சையரசந்தாங்களில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். 7.8.2009 அன்று தூசி காவல் நிலையத்தில் என் தம்பி கிருசுடிணன் கையொப்பம் போட சென்றாா். காலை 10.30 மணிக்கு கையொப்பம் செய்து திரும்பி வரும்போது. அப்துள்ளாபுரம் அருகே சென்ற போது பின்னால் மோட்டாா் சைக்கிளில் வந்த நபா்கள் என் தம்பியை வெட்டிவிட்டாா்கள். பின்பு அவரை காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சோ்த்தோம். அங்கிருந்து மேல்சிகிச்கைக்காக சென்னை அப்போலோ மருத்துவமனையில் சோப்பதற்காக தனியாா் ஆம்புலென்சில் சென்றோம். காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையிலிந்து அந்த அம்புலென்சில் நானும் காயம்பட்ட என் தம்பி மாமியாா் அலமேலு எனது மச்சான் குமாா் ஆகியோருடன் சென்றோம். அம்புலென்சை சக்திவேல் என்பவா் ஓட்டி சென்றாா். பொன்னேரி கரை ரயில்வே கேட்டை தாண்டி சென்றபோது சிகப்பு நிற வண்டி ஒன்று குறுக்கே வந்து ஆம்புலென்சை மறித்து ஆம்புலென்சின் உள்ளே வந்து என் தம்பியை கத்தியால் வெட்டினாா்கள். காரிலும் ஆட்டோவில் வந்தார்கள். 10 12 பேர் அவ்வாறு வந்தார்கள். அவசர உறுதியில் இருந்த கதவை உள் தாழ்ப்பாள் போட்டு விட்டோம்.கண்ணாடியை உடைத்து உள்ளே கையை விட்டு என் தம்பியை வெளியே எடுத்தார்கள். என் தம்பி கையால் தடுக்கும் போது இரண்டு மூன்று

இடங்களில் வெட்டி விட்டார்கள். அதனால் எனக்கும் காயம் ஏற்பட்டது. அதன் பின்பு அவர்கள் அங்கிருந்து போய்விட்டார்கள். சம்பவம் முடிந்தவுடன் முதலில் பெரிய காஞ்சிபுரம் காவல் நிலையம் சென்று பின்பு காஞ்சி தாலுகா காவல் நிலையம் வந்தோம். புகார் கொடுத்தோம். போலீசார் விசாரித்தார்.

ஒன்றாம் எதிரி தரப்பில் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.

இரண்டாம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் ஆகாததால் குறுக்கு விசாரணை : இல்லை